STC.No. 175 /2019 அ.சா. 1 சுதாகர் த/பெ. உத்திரேசன் வயது 41 நேரம். 02.59 P.M. 27/09/2021

சாட்சி மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்து எதிரி தரப்பில குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

எனக்கு தற்பொழுது என்ன வயது என்றால் 41 வயதாகும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தேங்காய் வியபாரம் செய்து வருகிறேன். நான் எந்த ஆண்டில் இருந்து தேங்காய் வியபாரம்செய்து வருகிறேன் என்றால் 2011 ம் ஆண்டு முதல் தேங்காய் வியபாரம் செய்து வருகிறேன். நான் எங்கு தேங்காய் மண்டி வைத்துள்ளேன் என்றறால் பல்லவள்ளி வெங்கடாவரம் என்ற இடத்தில் மண்டி வைத்தள்ளேன். தேங்காய் மண்டி வைத்துள்ள இடம் எனக்கு செந்தமான இடமா என்றால் சொந்தமான இடம். தேங்காய் வியபாரம் செய்வதற்கான பதிவு சான்று நான் பெற்றுள்ளேனா என்றால் பெறவில்லை. வெளிநாடுகளுக்கு வியபாரம் செய்வர்களுடன் தொடர்பு நான் உள்ளூரில் தேங்காய் வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி வியபாரம் செய்து வருகிறேன். பதிவு சான்ற இல்லாமல் தேங்காய் வியபாரம் செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது ஆனால் உள்ளூரில் தேங்காய் வியபாரம் செய்யலாம். நான் தேங்காய் தோப்பு வைத்துள்ளேனா என்றால் தேங்காய் தோப்பு வைத்துள்ளேன். நான் குத்தகைக்கு தேங்காய் தோப்பு எடுத்து வைத்துள்ளேன். நான் மேற்படி தோப்புகளில் இருந்து வரும் தேங்காய்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நபர்களுக்கு தேங்காய்களை விற்று விடுகிறேன். நான் தேங்காய் வியபாரம் யாருக்கு செய்கிறேன் என்றால் காமேஷ்குமார், மினிபாரத் ஆகிய நபர்களுக்கு நான் தேங்காய் வியபாரம் செய்து வருகிறேன். நான் வருடத்திற்கு எத்தனை கோடி ரூபாய்க்கு வியபாரம் செய்கிறேன் எனறால நான் ரூபாய் 80,00,000த்திற்கு வருடத்திற்கு வியபாரம் செய்வேன். நான் 2018 ம் ஆண்டு எவவ்ளவு ரூபாய்க்கு தேங்காய் வியபாரம் செய்தேன் என்றால் 75,00,000திலிருந்து 80,00,000 வரை வியபாரம்செய்து இருப்பேன். நான் வியபாரம் செய்வதை கணக்கு புத்தத்தில் எழுதி வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். நான் என்னுடைய வியபார கணக்கு வணக்குகளை இவ்வழக்கில ஆவணமாக தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் வருமான வரி செலுத்துகிறேன். எனக்கு யார் ஆடிட்டர் என்றால் வாணியம்பாடியைச் சார்ந்த ரவி என்பவர் ஆவார். ஆடிட்டர் ரவி வாணியம்பாடியில் எங்கு வசித்து வருகிறார் என்றால் வாணியம்பாடி பழைய பேருந்து நிலையத்திற்கு எதிரில் அவருடைய அலுவலகம் உள்ளது. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற வியபாரம் குறித்து வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதற்கான ஆவணத்தை இவ்வழக்கோடு தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எத்தனை ஆண்டுகளாக நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சுமார் 6 ஆண்டுகளாக தாக்கல் செய்து வருகிறேன். எதிரிக்கு ரூ.1 கோடி கடன் கொடுத்த விவரத்தை என்னுடைய வருமானவரி கணக்கில் தெரிவித்துள்ளேனா என்றால்

தெரிவிக்கவில்லை. வருமான வரி கணக்கில் ஏன் அந்த விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் நான் வெளியில் கடன் வாங்கிக்கொடுத்ததினால் அதை தெரிவிக்கவில்லை. நான் வெளியில் யார்யாரிடம் எவ்வளவு ரூபாய் கடன் வாங்கி கொடுத்துள்ளேன் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் யார் யாரிடம் கடன் வாங்கினேன் என்றால் பெரியபேட்டையைச் சா்ர்ந்த கார்த்திகேயன் என்பவரிடம் ரூ.30,00,000மும் எனது தம்பி மோகன்பிரபு என்பவரிடம் ரூ.50,00,000மும் திருப்பதி வழக்கறிஞரிடம் ரூ.30,00,000மும் வாங்கினேன். கார்த்திகேயனிடம் நான் எந்த தேதியில் ரூ.30,00,000மும் வாங்கினனேன் என்றால் 16.08.2018 ம் தேதியில் வாங்கினேன். மேகன்பிரபுவிடம் ரூ.50,00,000த்தை 12.08.2018 ம் தேதி வாங்கினேன். வழக்கறிஞர் திருப்பதியிடம் எந்த தேதியில் ரூ.30,00,000 ம் வாங்கினேன் என்றால் 10.08.2018ம் தேதி வாங்கினேன். இந்த கடன்களை நான் எதற்காக வாங்கினேன் என்றால் பிரேம்குமாருக்கு கொடுப்பதற்காக கடன் வாங்கினேன் பிரேம்குமார் 2 மாதத்தில் திருப்பி கொடுப்பதாக சொன்னதினால் கடன் வாங்கிக் கொடுத்தேன். கார்த்திகேயனிடம் ரூ.30,00,000ம் எந்த சொத்தை அடமானம் வைத்து வாஙகினேன் என்றால் நம்பிக்கையின் பேரில் கடன் வாங்கினேன் சொத்தை அடமானம் வைக்கவில்லை. கார்த்திகேயன் என்ன தொழில் செய்து வருகிறாா் என்றால் ரியல்எஸ்டேட் வியபாரம் செய்து வருகிறேன். மோகனபிரபு என்ன தொழில் செய்து வருகிறாா் என்றால் ஜாப்வேர் இன்ஜினியராக மைசூரில் வேலை செய்து வருகிறாா். அவா் என்ன படித்துள்ளாா் என்றால பி.இ. படித்துள்ளார். அவர் எந்த கம்பெனியில் வேலை செய்து வருகிறாா் என்றால் Harish Globel India (P)Limited. அவர் மாதம் எவ்வளவு சம்பளம் பெற்று வருகிறாா் என்றால் மாதம் ரூ.95.000ம் சம்பளமாக பெற்று வருகிறாா். அவரிடம் ரூ.50,00,000ம் பெறுவதற்கு ஆவணம் எதையாவது எழுதி கொடுத்தேனா என்றால் ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை. கார்த்திகேயனிடம் பணம் வாங்கியதற்கு ஆவணம் எதையாவது எழுதிக்கொடுத்தேனா என்றால் ஆவணம் எதையும் எழுதிக்கொடுக்கவில்லை. திருப்பதி வழக்கறிஞரிடம் நான் பணம் வாங்கியதற்கு ஆவணம் எழுதிக்கொடுத்தேனா என்றால் ஆவணம் எதையும் எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி 3 நபா்களிடம் கடன் வாங்கி எதிரிக்கு கொடுத்தாக என்னுடைய புகாரில் தெரிவித்துள்ளேனா என்றால் புகாரில் தெரிவிக்கவில்லை. இந்த விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை. என்னுடைய வங்கிக்கணக்கு எந்த வங்கியில் வைத்துள்ளேன் என்றால் வாணியம்பாடி கரூர் வைசியா வங்கிக்கணக்கில் வைத்துள்ளேன். மேற்படி கடன்களை வாங்கி எதிரிக்கு கொடுக்கும்போது என்னுடைய வங்கிக்கணக்கில் எவ்வளவு பணம் இருப்பு உள்ளது என்றால் ரு.15,000 இருப்பு இருந்தது. எதிரி என்ன வேலை செய்து வருகிறாா் என்றால் ஷர்மாா்கெட் மற்றும் ரியல் எஸ்டேட் வேலை செய்து வருகிறாா். எதிரியிடம் எந்தெந்த தேதியில் எவ்வளவு ருபாய்

கடன் கொடுத்த விவரத்தை என்னுடைய புகாரில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை. மேற்படி கடன் வாங்கிய விவரங்களை வருமான வரி கணக்கில் நான் காட்டியிருக்கிறேனா என்றால் காட்டவில்லை. எனக்கு அசையா சொத்துக்கள் உள்ளதா என்றால் சம்மந்திகுப்பம் கிராமத்தில் ஒரு வீடு உள்ளது வெங்கடாபுரம் கிராமத்தில் அரை ஏக்கர் நிலம் உள்ளது சென்னை ஆவடியில் ஒரு வீட்டு மனை உள்ளது. இந்த 3 சொத்துக்களும் என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சென்னையில் உள்ள வீட்டு மனையை எனது வருமான வரியில் காட்டி உள்ளேனா என்றால் அது 2006 ல் வாங்கியது அதை நான் வருமான வரியில் காட்டவில்லை. எதிரி ஆன்லைன் வியபாரம் செய்வதும், ரியல்எஸ்டேன் வியபாரம் செய்வதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எதிரிக்கு என்னிடம் ஒரு கோடி ரூபாய் கடன் வாங்குவதற்கான திறன் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு ரூபாய ஒரு கோடி யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் என்னுடைய மனைவி, கார்த்திகேயன் மற்றும் என்னுடைய தம்பி இருந்தார்கள். எதிரிக்கு கொடுத்த ரூபாய் ஒரு கோடி எந்தவகை பணம் மதிப்புக்கொண்ட தாள்களாக கொடுத்தேன் என்றால் ரூ500 தாள்களாக தான் கொடுத்தேன். எதிரிக்கு என்ன சொத்து இருந்தது என்றால் அவருக்கு ஒரு வீடும், நிலமும் இருந்தது. நான் சொல்லும் வீடும், நிலமும் எதிரி சம்பாதிதது இல்லை என்றும் அந்த சொத்து எதிரியின் மூதாதையர் சம்பாதித்த சொத்து எதிரிக்கும் அந்த சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்க நான் எந்த தேதியில் பணம் கொடுததேன் என்றால் 15.08.2018ம்தேதி பணம் கொடுத்தேன். எதிரிக்கு எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் மதியம் சுமார் 3 மணிக்கு கொடுத்தேன். எதிரி 15.08.2018 ம் தேதி காசோலை கொடுத்தாரா என்றால் காசோலை கொடுத்தார். 15.08.2018ம்தேதியிட்ட காசோலையை எதிரிஎன்னிடம் பணம் வாங்கியபோது கொடுத்தாரா என்றால் 17.08.2018 ம்தேதியிட்ட இரண்டு காசோலைகளை அன்றையதினம் கொடுத்தார். தற்போது சாட்சி 17.10.2018ம்தேதியிட்ட இரண்டு காசோலைகளை கொடுத்தார். அந்த காசோலைகளின் எண்கள் 360119, 360120 ஆகும். அந்த காசோலைகளை எந்த தேதியில் எனது வங்கியில் நான் வசூலுக்கு தாக்கல்செய்தேன் என்றால் 17.10.2018ம்தேதி என்னுடைய வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்தேன். நான் 15.08.2018ம்தேதி பணம் கொடுத்து இருந்தால் அந்த தேதியிட்ட காசோலையை தான் எதிரீ கொடுத்திருப்பார் என்றும் நான் பொய்யாக 17.10.2018ம் தேதியிட்ட காசோலையை எதிரி வழங்கியதாக தெரிவிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வங்கியில் தாக்கல் செய்த காசோலைகள் என்ன ஆச்சு என்றால் இரு காசோலைகளும் 18.10.2018 ம்தேதி போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் இரண்டு காசோலைகளும் திருப்பப்பட்டது. நான் காசோலைகள் திருப்பபட்டபோது என்ன செய்தேன் என்றால் எதிரிக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தபோது எதிரி 2 மாதங்கள் கழித்து 27.12.2018ம்தேதி மீண்டும் தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதன் பிறகு மீண்டும் 27.12.2018ம்தேதி எனது வங்கிக்கணக்கில வசூலுக்காக தாக்கல்

செய்தபோது மீணடும் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. எதிரி நான் சொல்வதை போல இரண்டு மாதங்கள் கழித்து காசோலையை மீண்டும் தாக்கல் செய்ய சொல்லி கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இரண்டாவது முறை நான் தாக்கல் செய்த காசோலைகளை போதிய பணம் இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த காசோலைகள் Conduct Drawer என்று காரணம் சொல்லி திருப்பப்பட்டது. இந்த காரணத்தின் அடிப்படையில் நான் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த காரணத்தின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய வழக்கு என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் எதிரிக்கு அனுப்பினேன் என்றால் 09.01.2019 ம்தேதியில் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன். எதிரி நான் அனுப்பிய சட்ட அறிவிப்பை வாங்கினாரா என்றால் வாங்கியிருப்பார். நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு எதிரிக்கு சார்பாகவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு நான் அனுப்பி சட்டஅறிவிப்பு சார்பு ஆனதினால் தான் எதிரிக்கு ரூ.1,25,00,000 ம் கொடுப்பதாக எனக்கு வாட்ஸ்அப் மெசேஜ் அனுப்பி உள்ளார். நான் அனுப்பிய சட்ட அறிவிப்பை எதிரி வாங்கவில்லை என்றும் எதிரியினுடைய சித்தப்பா வாங்கினார் என்றால் எதிரியின் சித்தப்பா தான் வாங்கினார் என்றால் சரிதான். எதிரியின் சித்தப்பா வாங்கி அநத தகவலை எதிரிக்கு தெரிவித்த பிறகு தான் எதிரி எனக்கு ரூ.1,25,00,000ம் கொடுப்பதாக வாட்ஸ்அப் தகவலை அனுப்பினார். சட்டப்படியும் முறைபடியும் எதிரிக்கு காசோலை திருப்பட்ட 30 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பாததினால் இவ்வழக்கு சட்டப்படி செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு காசோலை திருப்பப்பட்ட 30 நாட்களுக்குள் அவருக்கு அறிவிப்பு சார்பு செய்யப்படதாதினால் இவ்வழக்கு செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலைகள் திருத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கோடிக்கணக்கில் கடன் வாங்குவதற்கு திறன் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2018 ம் ஆண்டு நான் வருமான வரியை தாக்கல் செய்வதற்கான ஆடிட்டர் அறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த அறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். இந்த பணம் சம்மந்தமாக அறிக்கையில் நான் தெரிவிக்கவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலைகளில் என்னுடைய தேவைக்கேற்ப வெவ்வேறு இங்கி (Ink) கொண்ட பென்களால் நிறப்பி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கண்க்கில் நான் கடன் கொடுப்பதற்கு முன்பு அவர் கணக்கில் வங்கி இருப்பு எவ்வளவு இருக்கிறது என்று கேட்டு கொண்டேனா என்றால் நான் அறிந்து கொள்ளவில்லை. எதிரிக்கு நான் கடன்

கொடுக்கவில்லை என்றும் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை. நேரம்.4.09

சாட்சி கையொப்பம்

(Sd./-) சுதாகர்

Taken down by me in open court and ready over to the witness in the presenceof the accused and admitted by the witness to the correction.

(Sd./-) M.Kalimuthuvel,
Judicial Magistrate, Vaniyambadi.